செய்தி வெளியீடு எண்:366 நாள்: 12.06.2017

# செய்தி வெளியீடு

## <u>தென்னாப்பிரிக்காவின் குவாசுலு நடால் மாநில சட்டமன்ற வேளாண்மைக் குழு சென்னை வருகை – கலந்துரையாடல்</u>

தென்னாப்பிரிக்காவின் குவாசுலு நடால் மாநில சட்டமன்ற வேளாண்மைக் குழு திருமதி. நோமாகுகு சிமிலானே – சூலு (Hon.Nomagugu Simelane-zulu) அவர்களது தலைமையில் 5 உறுப்பினர்கள் மற்றும் 2 அலுவலர்களுடன் இன்று (12.06.2017) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு வருகை புரிந்தது. அப்போது தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழுத் தலைவர் திரு. பி.எம். நரசிம்மன் அவர்களது முன்னிலையில், திரு. க. பூபதி, சட்டமன்றப் பேரவைச் செயலாளர் (பொறுப்பு), திரு. ஹன்ஸ் ராஜ் வர்மா, அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, திரு. ககன்தீப் சிங் பேடி, அரசு முதன்மைச் செயலாளர், வேளாண்மைத் துறை மற்றும் திருமதி. கோ. மதுமதி ஆணையர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் ஆகியோர்கள் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு குழு கோரிய தகவல்களுக்கு பரஸ்பர கலந்துரையாடலின் அடிப்படையில் தகவல்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டது. இக்கூட்டத்தின்போது சட்டமன்றப் பேரவை மதிப்பீட்டுக் குழுவின் அலுவலர்கள், மரபு சீர்முறை அலுவலர்கள் மற்றும் பிரிவின் இதர அலுவலர்களும் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9